**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Civil Procedure)**

**அசல் வழக்கு எண்971/2008 C/W 753/2008.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8ம் நாள் பி.வா.த.சா. 1. எத்திராஜ் அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | எத்திராஜ் | வயது | : | |
| த/பெ. | : | கண்ணப்பன் | இனம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| சமயம் | : | | தாலுக்கா | : | |

**பி.வா.த.சா.1- குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் முதல் பிரதிவாதியான ரவீந்திராநாத்க்கு நான் தான் பொது அதிகார முகவர் என்றால் சரிதான். 25.08.2005 அன்று என்னை அவர் முகவராக நியமித்தார் என்றால் சரிதான். அந்த ஆவணம் எனக்கு எழுதிக்கொடுத்த மூன்று மாதங்களுக்கு முன்பு தான் ரவீந்தரநாத்தை முதலில் பார்த்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்னர் அவர் எனக்கு பழக்கம் இல்லை என்றாலும் சரிதான். அவரது தந்தையான சந்திரசேகர் என்பவரை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் ரவீந்தரநாத்தை பார்பதற்கு முன்பே சந்திரசேகர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கை தொடுத்த கோரமண்டல் நிறுவனத்திற்கும் சந்திரசேகருக்கும் இடையே நடந்த கிரய ஒப்பந்தம் மற்றும் அது சம்மந்தமான எந்த தகவலும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

2. வழக்கின் புல எண்கள் தற்போது ஞாபகத்தில் இல்லை. இந்த வழக்கின் வாதியான கோரமண்டல் நிறுவனம் எந்த நாளிலிருந்து வழக்கு சொத்தில் உரிமை கோருகிறார்கள் எப்போதிலிருந்து எனக்கு தெரிய வந்தது என்றால் எனக்கு பொது அதிகார பத்திரம் அளித்தபின் தெரியவந்தது. இந்த வழக்கு எப்போது வாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் ஞாபகத்தில் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எத்தனை நாள் கழித்து வழக்கு சொத்தில் நான் பொது முகவர் என்ற அடிப்படையில் கிரயம் செய்தேன் என்றால் அதன் விவரம் எனக்கு ஞாபகத்தில் இல்லை. யார்யாருக்கு என்னால் கிரயம் செய்யப்பட்டது என்றால் மணி நாடார் மற்றும் ராஜேந்திரனுக்கு கிரயம் செய்யப்பட்டது. எந்த தேதியில் கிரயம் செய்யப்பட்டது என்று ஞாபகத்தில் இல்லை. தற்போது கிரய சொத்துக்கள் மணி நாடார் மற்றும் ராஜேந்திரன் பெயரில்

உள்ளதா என்றால் இல்லை அவர் வேறு ஒரு நபருக்கு கிரயம் செய்துள்ளார் யாருக்கு கிரயம் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனக்கும் மணிநாடார் மற்றும் இராஜேந்திரனுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். ரவீந்திரனாத் தற்போது பெங்ளூரில் வசித்து வருகிறார் விலாசம் எனக்கு தெரியாது.

(வாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க விசாரணை மேலும் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

**(Sd/-.Saranya Selvam)**
District Munsif,
Sriperumbudur. (FAC)